# பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 119
இதழ்: 05

12—03—1993
விலை ரூபா 3-50


**தவக்காலம்:**

**மனமாற்றத்திற்கு அழைப்பு**

உங்களைச் சுத்திகரியுங்கள்,
தூய்மைப்படுத்துங்கள்.
நம் கண் முன்னிருந்து உங்கள்
தீச்செயலை அகற்றுங்கள்;
தீமை செய்வதை விட்டு ஒழியுங்கள்;
நன்மை செய்யக்
கற்றுக்கொள்ளுங்கள்;
நீதியைத் தேடுங்கள்,
ஒடுக்கப்பட்டவனுக்கு
உதவி செய்யுங்கள்,
திக்கற்ற பிள்ளைக்கு
நீதி வழங்குங்கள்,
கைம்பெண்ணுக்காக வழக்கு
நடத்துங்கள்.
(இசை. 1:16,17)

* கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் *

# மக்கள் சமாதானமாக வாழவேண்டுமென்பதே

# எனது ஆன்மீக இலட்சியம்

★ தலைவர்
**வே. பிரபாகரன்**



**"சமாதானத்தை நான் ஆக்கபூர்வமாக விரும்புகிறேன். எமது மக்கள் நிம்மதியாக, சமாதானமாக, சுதந்திரமாக வாழவேண்டும் என்பதே எனது ஆன்மீக இலட்சியம்," என்று தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் பி. பி. ஸி. தமிழோசைக்கு வழங்கிய பேட்டியில் கூறினார்.**

கடந்த 2–3–93 செவ்வாய் அன்று பி. பி. ஸி. தமிழோசை நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்ட இப்பேட்டி, தமிழ் மக்களின் விடிவிற்கு வழிகோலும் நியாய பூர்வமான அம்சங்களையும் எண்ணங்களையும் அடக்கியிருந்தது.

''பிரபாகரன் அவர்களே! சமாதான முயற்சிகளில் ஆன்ம பூர்வமாக இறங்க நீங்கள் தயாரா? இதற்கு உங்கள் நிபந்தனைகள் என்ன?" என்று அண்மையில் யாழ்ப்பாணம் வந்த பி. பி. ஸி. அறிவிப்பாளர் ஆனந்தி அவர்கள் வினவிய பொழுது, ''சமாதானத்திற்கு நாம் எவ்வித நிபந்தனைகளையும்விதிக்கவில்லை. சிங்கள அரசு தான் சமாதானத்திற்கும்பேச்சு வார்த்தைகளுக்கும் நிபந்தனைகளை விதித்துக்கொண்டிருக்கிறது'' என்று தலைவர் அவர்கள் மேலும் கூறினார்.

எமது பிரச்சனைக்கு சமாதானவழிமூலம் தீர்வு ஏற்படுவதாயின் சிங்களப் பேரினவாத ஆட்சியாளரின் மனோநிலையிலும், அணுகு முறையிலும் ஓர் அடிப்படையான மாற்றம் ஏற்படவேண்டும். அப்படியான மாற்றம் நிகழுமானால் சமாதான வழிமுறையில் எமது பிரச்சனைக்கு தீர்வு ஏற்படுமென அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இப்பேட்டி சர்வதேச ரீதியில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## இளைப்பாறும் ஆயர் அம்பலவாணருக்குப் பாராட்டு

# "உலகத்து அரங்குகளில் உரத்த குரல் கொடுத்த பெரும் தலைவர்"

— யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்

தென்னிந்திய திருச்சபை யாழ் ஆயர் அதி வண. D. J. அம்பலவாணர் அவர்கள், "சிக்கல் பல நிறைந்த இக்கால கட்டத்தில், குரலற்றவர்களாய் துன்புறும் தமிழரின் உரிமைக்காக தென்னிலங்கையிலும் உலகத்து அரங்குகளிலும் உரத்த குரல் கொடுத்த பெரும் தலைவர்,'' என்று கத்தோலிக்க யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கூறினார்.

கடந்த 22 ஆண்டுகளாய் தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆயராக எம் மண்ணையும் மக்களையும் நேசித்து மனித நேயத்துடன் மகத்தான பணியாற்றிய பேராயர் அம்பலவாணர் அவர்கட்கு சென்ற 27–2–93 சனிக்கிழமை அன்று, அவரின் ஓய்வையொட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் அதி. வண. S. ஜெபநேசன் அடிகளாரின் தலைமையில் அக் கல்லூரிச் சதுக்கத்தில் நடந்த சேவைநலன் பாராட்டு விழாவில் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை உரையாற்றினார்.

''கிறிஸ்தவ ஒன்றிப்புக்கும் கத்தோலிக்க திருச்சபையுடன் நெருங்கிய நல்லுறவை வளர்க்கும் பாலமாகவும் ஆயர் அம்பலவாணர் திகழ்ந்தார்,'' என்றும் மேலும் அவர் கூறினார்.

ஆயர் அம்பலவாணரின் வாழ்வும் பணியும் பற்றி பல கோணங்களிலிருந்து பலர் உரையாற்றினர். ஆயர் அவர்கள் உள்ளம், சிந்தனை, சொல், செயலில் உயர்ந்தவரென்று கலாநிதி ஜெயகுலராஜ் அவர்களும்; அல்லல்படும் மக்களுக்கு

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# "சிறையில் இருந்தேன் என்னைக் காண வந்தீர்கள்"

## ஆயர் இராயப்பு யோசவ்

கொழும்பிலுள்ள "மகசீன்" சிறைச்சாலையில், பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெருந்தொகையான தமிழ் கைதிகளை, 14.2.93 அன்று மன்னார் ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகை நேரில் சென்று சந்தித்து அவர்களுக்கு ஆறுதலளித்தார்.

சிறைச்சாலை சிற்றாலயத்தில் ஆயர் அவர்கள் திருப்பலி ஒப்புக்கொடுத்த வேளையில், அங்கிருந்த பெரும்பாலான கத்தோலிக்க கைதிகள் திருப்பலியில் பங்குபற்றினர். பூசைப் பலியின் முடிவில், ஆயர் யோசவ் எல்லோரையும் சந்தித்து, அவர்களின் சோகக் கதைகளுக்குப் பொறுமையுடனும், அநுதாபத்துடனும் செவிமடுத்தார்.

கொழும்பில் மாத்திரம் 5000க்கு மேற்பட்ட சிறைவாசிகள் இருக்கின்றனர். இவர்கள் ஆன்ம நலன்களைப் பேணுவதற்காக, அருட்தந்தை நொயெல் டயஸ் அடிகளார் முழுநேரமாக தன்னை அர்ப்பணித்திருக்கிறார். இவருடன்

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

# கிறிஸ்தவ இறை இயல் கல்லூரியில் கத்தோலிக்க மாணவரின் ஒரு புதிய அனுபவம்

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் வருடாந்தக் கருத்தரங்கு கடந்த மாசி 18 – 21 வரை மருதனாமடத்திலுள்ள தென் இந்திய திருச்சபையின் கிறிஸ்தவ இறைஇயல் கல்லூரியில் நடைபெற்றது. அருட்திரு. A. பிலிப் அவர்கள் வழிநடத்திய இக்கருத்தரங்கின் மையப் பொருள்: பொதுநிலையினரின் ஞான வாழ்வு என்பதே.

இறைஇயல் கல்லூரி மாணவர்கள் எல்லா வசதிகளையும் எமக்குச் செய்து தந்ததுடன், கலந்துரையாடல்களிலும் ஒரு நாள் எம்முடன் இணைந்து கொண்டனர். இவர்களுடன் நாம் கொண்ட இத்தொடர்பு பழைய முரண்பட்ட போக்குகளிலிருந்து நிரந்தரமாக நாம் விடுபட எமக்கு வாய்ப்பு அளித்தது.

இக்கருத்தரங்கு எமது முதலாம் வருட மாணவர்களுக்கு ஒரு புதிய அனுபவமாக அமைந்தது. அவர்கள் ஏனையோருடன் உறவை ஏற்படுத்திக் கொள்ளவும், பழைய மாணவர்கள் தாம் ஏற்கனவே உருவாக்கியிருந்த உறவை மேலும் வளர்க்கவும் துணையாக அமைந்தது. நாம் ஒவ்வொருவரும் எம்மை அறியவும் எமக்கும் இறைவனுக்கும், எமக்கும் அயலவருக்கும் உள்ள உறவு என்ன என்பதை உணர்ந்து கொள்ளவும் வாய்ப்புக்கிட்டியது. மேலும் எமது

(தொடர்ச்சி 3 ஆம் பக்கம்)

## புதிய நிர்வாகம்

புனித பிரான்சிஸ்கு அசிசியார் மூன்றாம் சபை (பொதுநிலையினர்) கூட்டம் சபைக் கர்த்தா அருட்திரு. J. P. E செல்வராஜா அடிகளார் தலைமையில், யாழ் பேராலயத்திலுள்ள சபைக் கூடத்தில் 25.02.93 மாலை நடைபெற்றது.

வரும் 3 ஆண்டு காலத்திற்கான புதிய தேர்வில் சகோதரர். L. C. நீக்கிலஸ் தலைவராகவும், சகோதரி A. மேரிறோஸ் உபதலைவியாகவும், சகோ. J.E. இராஜநாயகம் செயலாளராகவும், சகோதரர் M. எட்வேட் பொருளாளராகவும், மேலும் ஒன்பது பேர் ஆலோசகர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# 1992இல் மனித முன்னேற்ற நடுநிலையம் 78,178 குடும்பங்களுக்கு உதவி வழங்கியது

''யாழ் மனித முன்னேற்ற நடுநிலையம், 1992ஆம் ஆண்டில் போர்க்கால சூழ்நிலையில் மேலும் வறுமையில் சிக்குண்டு, பொருளாதாரத்தடை, உணவு பற்றாக்குறை, எரிபொருள் தடை, இல்லிட வசதியின்மை போன்ற பல்வேறு பல நெருக்கடிகட்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது சகோதரங்கட்கு தன்னாலான தனது வரம்பிற்குட்பட்ட பல தரப்பட்ட உதவிகளைச் செய்து வந்துள்ளது. அவற்றுள் உலர் உணவுவிநியோகம் மிகவும் முக்கியமானதும் அவசியமானதுமாயிருந்தது,'' என்று யாழ் மனித முன்னேற்ற நடுநிலைய

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

**கவர்ச்சிகரமான பரிசில்கள்**

# வேதாகம கட்டுரைப் பேச்சுப் போட்டிகள்

1993ஆம் ஆண்டிற்கான மறைவட்ட விவிலிய கட்டுரை, பேச்சுப்போட்டிகள் வருகிற மே மாதம் 5ஆம் திகதி யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறவிருக்கிறது. இப்போட்டிகளில் வெற்றியீட்டுவோர், யூன் மாதம் 18ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேசியப் போட்டியில் பங்குபெறத் தகுதியுள்ளவராவர்.

இப்போட்டிகள் 1–1–1993 இல், 12, 16, 20 வயதின் கீழ் உள்ள மாணவர்க்கென மூன்று பிரிவாக, முதலில் பங்குமட்டத்தில் நடைபெறும். இதற்கான மேலதிக விபரங்களுக்கு பங்குத்

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

## எம்கருத்து

# மாதர் குலத்தின் மானம் காப்போம்

அண்மைக் காலங்களில் மாதர் குலத்தின் மானம் காக்கும் பிரச்சனை மக்கள் மத்தியில் முக்கியத்துவம் பெற்றிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது மட்டுமல்ல, முழுமனத்துடன் வரவேற்கத்தக்க ஒரு விடயமுமாக இருக்கிறது.

காலைக் கதிரவன் கதிர்களில் அன்றாடம் செய்தித் தாள்களைப் புரட்டினால் நாம் அங்கு காண்பதென்ன? மாலைப் பொழுதானதும் சாலையில் நடந்து செல்லும் பெண்களை மடக்கி நகைகளை அபகரித்தல், கண்களைக் கட்டி அழைத்துச் சென்று மானபங்கம் செய்தல், இன்னும் பல அசிங்கமான தகவல்களை நாம் அன்றாடச் செய்திகளாக அறிகிறோம். இவற்றைவிட மோசமாக, குறிப்பிடுவதற்கே கூசும்படியான நிகழ்ச்சிகளும், நம் தமிழ் சமுதாயம் வெட்கித் தலைகுனியும்படியான சம்பவங்களும் அடிக்கடி நம் காதுகளில் எட்டுகின்றன. வாழ வழியற்று, அன்றாட வயிற்றுப் பிழைப்பிற்கே வழியின்றி வறுமைக் கோட்டின்கீழ் நலிவுற்றிருக்கும் நம் மக்கள் இக்கொடுமைகளுக்கு ஆங்காங்கு விலங்குகள்போல இரையாகி வருகின்றனர் என்பது நமது பழைமை பெருமையான பண்பாட்டிற்கு மிகப் பெரும் கேடுவிளைவிக்கும் என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

தினமும் பெருகிவரும் இக்கொடுமைகள் சமீப காலத்தில் ''ராகிங்'' என்னும் போர்வையில் ஒரு புது வடிவம் பெற்றுள்ளன. முன்னொரு காலத்தில் பல கலைகளைக் கற்பிக்கும் கூடங்களில் எதுவித கறையுமின்றி அறிமுகம் செய்வதாக இருந்த ஓர் நிகழ்வு, இன்று நல் ஒழுக்க பண்பாட்டு எல்லையைக் கடந்து, பல்வேறு கல்விக்கூடங்களிலும் 'முசிப்பாற்றி'யாக வல்ல, மாறாக கோர வெறியாட்டமாகத் தாண்டவமாடுவது வேதனைக்குரியது.

பெண்களைக் கேலி செய்வது என்பது இன்றைய இளைஞர்களுக்குப் பொழுதுபோக்காகி விட்டது. அதுவும் ஒரு சிலர் குழுவாக அல்ல, கும்பலாக பெண்களை பகிரங்கமாக மானபங்கம் செய்வதில் அமோக இன்பம் — 'கிக்' — அடைகிறார்கள் போலும்! சில இளைஞர் தெரு வீதிகளில் நின்றுகொண்டு போகின்ற வருகின்ற யுவதிகளுக்கு புள்ளிகள் போடுவது மாத்திரமல்ல, அவர்களின், நடையை, உடையை, சடையை சரமாரியாகக் கிண்டல் செய்து, பட்டப் பெயர் சூட்டி இம்சிப்பதில் தனியின்பம் அடைகிறார்கள். இவ்வளவிலாவது முடிவதில்லை, அதுதான் பரிதாபம்!

எல்லா இளைஞர்களும் இப்படிச் செய்கின்றனர் என்று பொதுவில் குற்றம் சாட்டுவதில் நியாயமில்லை. நல்லவர்கள் பலரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அந்த அந்த வயதில் அந்தந்த உணர்வுகள் முனைப்பாக இருப்பது இயற்கை. ஆனால் அவற்றைத் தவறான முறையில் செலவிடுவது என்பதில்தான் குற்றம் இருக்கிறது. ஒரு பெண்ணைக் கேலி செய்யும்போது அதனால் அவளின் மனம் எவ்வளவு புண்படுகிறது என்பதைப்பற்றிச் சற்றுச் சிந்திக்க வேண்டும். உடன்பிறந்த சகோதரிகள் இல்லாதவர்கள் மட்டுமா இச்செயலில் ஈடுபடுகிறார்கள்? அப்படியல்ல!

பெண்களை கேலிசெய்வது படித்தவர்களுக்கோ, அன்றேல் படிப்பவர்களுக்கோ, அழகு அல்ல. படியாதவர்களைவிட படித்தவர்கள் அவர்களைக் கேலி, கிண்டல் செய்வதை அறியும்போது கல்வி எதற்காக என்ற கேள்வி எழுகின்றது, கல்வி மனதைப் பக்குவப்படுத்த வேண்டுமே தவிர மனத்தைப் பங்கப்படுத்த விடக் கூடாது. கற்றவர்களின் பண்பாட்டுக்குறைவால் கல்வியைக் குறை கூற வேண்டியிருக்கிறது.

கிராமப் புறங்களில் ஒரு பெண்ணை யாராவது இம்சித்தால் அஃது ஊர் விவகாரமாகி விடுகிறது. சில சமயத்தில் பெரும் சச்சரவுகளும் ஏற்படுகின்றன. ஆனால் நகரங்களில் ஒரு பெண்ணை சில வாலிபர்கள் கிண்டல் செய்தால் அது நாகரிக முன்னேற்றத்தின் அறிகுறியெனத் தப்பாக எண்ணி, அருகிலுள்ள பெரியவர்களகூட அதைத் தட்டிக் கேட்கத் துணிவதில்லை. 'நமக்கெதற்கு இத் தொல்லை' என்று ஒதுங்கிவிடுகிறார்கள். அப்படி ஒரு சிலர் தட்டிக் கேட்க முற்பட்டாலுங் கூட அவர்களும் கிண்டலுக்கு ஆளாகி அவமதிக்கப்படுகின்றனர்.

இருவித கருத்துக்களுக்கு இடமில்லாத சமுதாய முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்சனைக்கு, இக்கொடுமைகளைக் கண்டு உள்ளம் வெதும்பும் நல்லோரும், பண்புள்ள புதியதோர் சமுதாயத்தைப் படைக்க பல தீயசக்திகளுக்கும் சவால்களுக்கும் மனம் தளராது முகம் கொடுத்துப் பணிபுரிவோர் எல்லோரும் திட்டமிட்டு ஒருமனப்பட்டு இந்தத் தீமையை திடாரிக்கமாக எதிர்க்க அணிவகுக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது!

# திருமறை அறிவை வளர்ப்போம்

## கிறிஸ்துவின் வருகைக்கு முன் இரட்சணிய வரலாறு

1, அகிலத்தையும் மனிதரையும் படைத்தவரான இறைவன், தமது படைப்புக்களையும், தனிநபர்களையும், மக்களினத்தாரையும் எப்போதும் பாதுகாத்து, தந்தைக்குரிய அன்புடன், அவர்களது வாழ்வின் இலக்கை நோக்கி உண்மையிலும் ஒருமைப்பாட்டிலும் வழிநடத்திவந்துள்ளார்.

ஆதியிலிருந்தே அடங்காமையும் பாவமும், அவற்றின் விளைவுகளான துன்பமும் மரணமும் மனிதகுல வரலாற்றில் இருந்துவந்துள்ள போதிலும், இறைவன் தாம் படைத்தவர்மீது கொண்ட அன்பைக் கைவிடவில்லை. ''ஒவ்வொருவருக்கும் உயிர் மூச்சையும் எல்லாப் பொருள்களையுமளித்து'' (அ. ப. 17,25) தமது செயல்களின் மூலம் அவர்களுக்குத்தம்மை வெளிப்படுத்திவந்தார். மக்களினத்தின்மீது இறைவன் கொண்ட இடையறா அன்பை, கருத்தைக்கவரும் வகையில் எடுத்துக்காட்டும் ஓர் வேதாகம வாசகம் ''உலகம் முழுவதும் அவரது அன்பினால் நிறைந்துள்ளது'' எனக் கூறுகிறது. (சங். 32,5) ''பலுகிப் பெருகிப் பூமியை நிரப்பி அதனைக் கீழ்ப்படுத்துங்கள். அதிலுள்ள அனைத்தையும் ஆண்டு நடத்துங்கள்'' (ஆ. ஆ. 1,28).

2. பழைய ஏற்பாட்டு அறிஞர் ஒருவரின் செபத்தில் காணப்படும் வாசகமாவது; ''தராசுத் தட்டில் நுண்ணிய எடைவேறுபாடுகாட்டும் மிகச்சிறிய துரும்புபோலும், நிலத்தில் விழும் காலைப்பனி நீர்த்துளியைப்போலும் உம் முன்னிலையில் இந்த உலகம் முழுவதும் இருக்கிறது. அனைவருக்கும் நீர் இரக்கம் காட்டுகிறீர். ஏனெனில் உம்மால் எல்லாம் செய்ய இயலும். மனிதர்கள் மனம் வருந்துவதற்கு வாய்ப்பளிக்கவே அவர்கள் பாவங்களைப்பார்த்தும் பாராமல் இருக்கிறீர். ஆம், நீர் உண்டாக்கிய அனைத்தின் மீதும் அன்புகூருகிறீர். படைத்தவற்றுள் எதையும் நீர் அருவருத்துத் தள்ளுவதில்லை. ஏனெனில் நீர் எதையேனும் வெறுத்துப் பகைத்திருந்தால் அதை உண்டாக்கியிருக்கவே மாட்டீர். உமது திருவுளமில்லாமல் இருந்திருந்தால் எதுதான் அழியாமல் நிலைத்திருக்கக் கூடும்? உம்மால் அழைக்கப்படாதிருந்தால் எதுதான் காப்பாற்றப்படக்கூடும்? உயிரினங்கள்மேல் அன்புள்ளவரே, நீர் எல்லாவற்றையும் காத்துவருகிறீர். ஏனெனில் யாவும் உம்முடையவையே, உமது சாகாத உயிர்மூச்சு அனைத்திலும் இருக்கிறது'' (ஞானாகமம் 11:23–27)

3. சகல மக்களினங்கள், நாகரீகங்கள், மத பாரம்பரியங்கள் அனைத்திற்கும் மூல காரணமாயிருப்பது இறைபராமரிப்புச் செயலேயாகும், ஏனெனில் இயற்கையில் நிலவும் ஒழுங்கின் மூலமும், மனிதரின் மனச்சாட்சியின்மூலமும் இறைவன் தம்மை வெளிப்படுத்தி, மனித உள்ளங்களைத் தொடுகிறார். ''அவர்கள் தம்மைத் தேடவேண்டுமென்பதற்காக இவ்வாறுசெய்தார். இருட்டிற் தடவித் தேடுவது போலாவது ஒருவேளை அவர்கள் தம்மைத் தேடிக்கண்டுபிடிக்கக் கூடுமென்றே இங்ஙனம் கடவுள் செய்தார்.'' (அ. ப. 17,27) கிறிஸ்துவின் வருகைக்குமுன்னுள்ள இரட்சணிய வரலாற்றுக் காலத்தைப் புனித சின்னப்பர் இறைவனது பொறுமையின் காலம் என அழைக்கிறார்.

4. ஏற்கெனவே கடந்த காலத்தில் இறைவன் சில விசேடமான காரியங்களைச் செய்ததுடன், தமது திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு தமக்கென ஒரு குறிப்பிட்ட மனித குழுவைத் தெரிந்துகொண்டார். கிறிஸ்து பிறப்பிற்கு ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்னர் செமித்திய இனத்தைச் சேர்ந்த, நீதி நேர்மையுள்ள மனிதரான ஆபிரகாமை தமது மக்களின் குலமுதுவராகத் தேர்ந்துகொண்டார். இறைவன் அவருடனும், அவரது குடும்பத்தினருடனும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அறநெறிக்குட்பட்டு, தமக்குப் பணிந்து நடக்க ஆபிரகாம் தாமாகவே உடன்பட வேண்டுமென இறைவன் அவரைக் கேட்டுக் கொண்டார். இதற்குப் பதிலாக அவருக்கும் அவர் வழிவந்தோர் அனைவருக்கும், அவர்கள் மூலமாக உலகின் எல்லா மக்களினங்களுக்கும் தமது ஆசியை அளிப்பதாக வாக்களித்தார். உனது சந்ததியினர்வழியாக அனைத்து மக்களினங்களும் ஆசீர்வதிக்கப் படும் என ஆபிரகாமுக்குக் கூறி (ஆ. ஆ. 12,3), அவரோடு இந்த விசேட உறவை ஏற்படுத்திய தன் மூலம் சகல மக்களினங்கள் மத்தியிலும் தமது மீட்பளிக்கும் பராமரிப்புத் திட்டம் நிறைவேற்றும் பொருட்டு தாமே மனித வரலாற்றில் குறுக்கிட்டு முதலில் செயலாற்றலானார்.

(வளரும்)

# தவக்காலச் சிந்தனை

## அகந்தை வேண்டாம்

பல பாவங்களின் அடித்தளம் அகந்தை. பெருமை, அகங்காரம், மேட்டிமை எனப்பல சொற்களால் இவை அறியப்படுகிறது. இப்பண்புகள் முகத்திலே, குறிப்பாகக் கண்களில் வெளிப்படுகின்றன. பெருமை கொண்ட மனதில் பிற பாவங்கள் எளிதாகச் செழித்து வளரும். தாழ்மையின்மை, பெருமை என்ற பெற்றோருக்குக் குழந்தையாகப் பிறந்த அகந்தைக்கு ஆறு உடன் பிறப்புக்கள் உண்டு. பொய், இரத்தம் சிந்துதல், சூழ்ச்சி, தீங்கு, பொய்ச்சாட்சி, சண்டை மூட்டுதல் அவையாகும். இப்பாவங்கள் ஒன்றையொன்று சார்ந்தவை; ஒன்றையொன்று வளர்ப்பவை; ஒன்றையொன்று தொடர்பவை.

''பணியுமாம் என்றும்
பெருமை சிறுமை அணியுமாம்
தன்னை வியந்து''

என்பது வள்ளுவம்.

எக்காலத்திலும் பணிவுடன் நடந்தாலே பெருமை தரும். தன்னைத் தான் பாராட்டிக் கொள்வது சிறுமைக் குணமாகும் என்பது இக்குறள் காட்டும் நெறி. பெருமை சிறுமையான காரணத்தை வள்ளுவர் மிக அழகாக விளக்கியுள்ளார்.

அளவுக்கு அதிகமாகத் தன்னை, தன் திறமைகளை நினைத்துக் கொள்வோர் பலர் உண்டு. உலகம் தன்னைச் சுற்றித் தான் இயங்குகின்றது என நினைப்பவர் அநேகர். வீட்டில் அலுவலகத்தில் சிறப்பு நிகழ்ச்சிகளில் ''நான் இல்லா விட்டால் நாறிப்போய் இருக்கும்'' என்று மார் தட்டுவோரும் நம்மில் இல்லாமல் இல்லை, இத்தனை நினைவுகளும் பெருமையின் சிதறல்களே. இப்படி நாம் கட்டிய பெருமைக் கோபுரங்களும், மாடமாளிகைகளும் எத்தனை எத்தனை?

பிறருடைய குற்றம் குறைகளைக் கண்டு கொள்ளாதிருப்பதில் தான் பெருமையிருக்கிறது. பிறருடைய குற்றத்தை குறைகளை எடுத்துக் காட்டுவது இழிகுணமாகும். இதனையே வள்ளுவர்:
''அற்றம் மறைக்கும் பெருமை
சிறுமைதான் குற்றமே கூறி
விடும்'' என்றார்.

எல்லாம் தெரிந்தவர் ஒருவரும் இல்லை. ஒன்றுமே தெரியாதவர் எவருமேயில்லை. எனவே நம்மையே நாம் சீர் தூக்கிப் பார்ப்போம். குறைகளை களைந்து நிறைவடைய முற்படுவோம்.

யாழ். திருவழிபாட்டுநிலையம்.

# சிறையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து வேறு இரு குருக்களும் நாலு கன்னியர்களும் பணியாற்றுகின்றனர். இன்னும் பொதுநிலையினர் சபையைச் சேர்ந்த ''பெத்தனி சகோதரர்கள்'' மாதத்தின் இரண்டாம் சனிக்கிழமைகளில் சிறைக்கைதிகளுக்கு ஆன்ம சரீர உதவிகளை வழங்கி வருகின்றனர்.

# சிலுவையின் பாதையில் நற்செய்தி

VI

அவரது தோற்றம் அவ்வளவு சீர்குலைந்திருந்தது. மனித சாயலே அவரிடம் இல்லை. மனிதர்களின் வடிவே அவரிடம் காணப்படவில்லை.

(இசை. 55 : 13)

உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். மிகச் சிறிய என் சகோதரருள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றைச் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்.

(மத். 25 : 40)

VII

நம் பாவங்களுக்காகவே அவர் காயப்பட்டார். நம் அக்கிரமங்களுக்காகவே நொறுக்கப்பட்டார்.

(இசை. 53 : 5)

நம் பாவங்களை அப்புறப் படுத்தி இறைவனுக்கு ஏற்புடையவர்களாய் வாழ, கழுமரத்தின் மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார். (1இரா. 2:24)

VIII

இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, "யெருசலேம் மகளிரே எனக்காக அழாதீர்கள், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவுமே அழுங்கள்" என்றார். (லூக். 23 : 29)

"ஒருவன் எனக்கு அன்பு செய்தால், என் வார்த்தையைக் கேட்பான். என் தந்தையும் அவன்மேல் அன்பு கூர்வார். நாங்களும் அவனிடம் வந்து அவனோடு குடிகொள்வோம்".

(அரு. 14:23)

IX

"நானோவெனில் மனிதனே யல்ல, புழுவுக்கு ஒப்பானேன், மனிதரின் நிந்தனைகளுக்கும் இகழ்ச்சிக்கும் ஆளானேன்"

(சங். 23 : 26)

"என் பெயரைக் குறித்து உங்களை எல்லாரும் வெறுப்பார்கள். இறுதிவரை நிலைத்து நிற்பவன் மீட்கப் பெறுவான்"

(மத். 20:22)

X

"மண்டை ஓடு" எனப் பொருள்படும் கொல்கொத்தா என்னும் இடத்திற்கு அவரை அழைத்துச் சென்றனர். அங்கே அவர்கள் அவருக்கு வெள்ளைப் போளம் கலந்த இரசத்தைக் கொடுத்தனர். அவர் அதை ஏற்கவில்லை. (மாற். 15: 23)

கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்துவிட்டார்கள்.

(கலா. 5: 24)

## 1992இல் மனித...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயக்குநர். அருட்திரு. M. E. பயஸ் அடிகளார் கடந்த ஆண்டு செயல்பாடுகள்பற்றி விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆனால் கரையோரப்பாதையிலுள்ள சில கிராமங்கள் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள்ளான படியால் அதனூடாக தரைமார்க்கமாக உலர் உணவுப் பொருட்களைத் தருவிக்கும் நிலையில் தடையேற்பட்டது. அதன் விளைவாக கப்பல் மூலம் சில அத்தியாவசிய பொருட்களை கொழும்பில் இருந்து தருவிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்தியுள்ளது. ஆனால் மேல் சொன்ன உணவுப்பொருட்களும் 50 மெற்றிக் தொன்னுக்குள்ளடக்கியதாக மட்டும் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டது. அந்த அடிப்படையில் சென்ற ஆண்டு ஐந்து தடவைகள் மாத்திரம் அத்தியாவசிய பொருட்களை தருவித்து இடம் பெயர்ந்து முகாம்களைத் தவிர்ந்த ஏனைய உறவினர்களின் வீடுகளிலும், ஆலயங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் 78,178 குடும்பங்கட்கு பங்கீட்டு முறையில் விநியோகம் செய்துள்ளது.

## கிறிஸ்தவ....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கைப் பயணத்தில் இக் கருத்தரங்கு ஒரு மைல் கல்லாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

இக் கருத்தரங்கில் பங்கு பற்றிய 39 மாணவர்களும், இதை ஒழுங்கு செய்த அருள் திரு அன்ரன் மத்தாயஸ் அடிகளும் ஒன்றிணைந்து உறவை மேலும் வளர்த்து, பல்வேறு பணிகளில் ஈடுபட வேண்டுமென்ற ஆர்வத்துடன் திரும்பினோம்.

R. J. அருள்ராஜா

## மரபுகளும் மாற்றங்களும்

— என். சண்முகலிங்கன்

### 3. கல்வி

3.1 கல்வி என்னும் சொல், கல்லுதல்–தோண்டுதல் என்ற வினையின் அடியாக பிறந்தது. Education என்ற ஆங்கிலச் சொல்லும், வெளிக்கொணர்தல்–வளர்த்தல் என்ற பொருள்தரும் Educere என்ற லத்தீன் சொல்லிலிருந்தே உருப்பெற்றது. உள்ளே உள்ள மனித ஆளுமையை வெளிக்கொணர்வதே கல்வி என விவேகானந்தர் கல்விக்கு தரும் வரைவிலக்கணம், மேலேகுறித்த சொல் விளக்கத்தின் அடியானதே.

தனிமனித ஆளுமை விருத்திக்கும், முழுமைக்குமான கருவியாக கல்வியை கண்ட அதே வேளையில், கல்வியானது தன் சமூகத்தின், தான் வழங்கும் பண்பாட்டின் பிரதிபலிப்பாகவும், உணரப்படும்.

3.2 ஆதிச் சமூகங்களில் வாழ்க்கையே கல்வியாக அமைய, நவீன சமூகங்களில் வாழ்க்கைக்காக கல்வி என்ற நிலை காணப்படும். கல்வியை வெறுமனே சமூக அசைவுக்கான (Social Mobility) கருவியாக காண்கின்ற நிலைமை புதிய சமூக மாற்றங்களின் விளைவாக வந்தது. எங்களைப் பொறுத்தவரை குடியேற்ற நாட்டாதிக்கம் தன் தேவைகளுக்காக திணித்த ஒரு கல்விமுறையின் வழியே, இன்றைய கல்வி பற்றிய விழுமியங்கள் தீர்மானமாயின.

கல்வியை தந்திரமான வாழ்க்கை முன்னேற்றத்துக்கான கருவியாக எமக்கு தந்துள்ள அந்நிய ஆதிக்க கால அமைப்பே இன்னும் தொடராமல், வெறும் சோற்றுக்கும், சுகத்துக்குமான சுயநலக் கல்வியாக அமையாமல், அறிவின்வழி சமூக முன்னேற்றமும், மானுடமும் வாழவேண்டும். யூலியன் ஹக்ஸலி சொன்னதுபோல, அறிவியலில் எழுகின்ற மனிதத்துவம் கல்வியால் இங்கு கனிய வேண்டும்.

ஆமாம்! மனம் உள்ள அறிவு, கல்வியின் பயன் ஆதல் வேண்டும்.

## 31ஆம் நாள் நினைவு



அன்னு தம்பிராசா

1899-5-20 1993-02-17

சீவியத்தில் இவரை நேசித்தோம்.
மரணத்திலும் இவரை மறவோம்.

இரங்கற் திருப்பலி 20-3-93 சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

அருட்திரு. T. அரசரெட்ணம்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், கலா,
மற்றும் உறவினர்கள்.

A/6/93

## தவக்காலத்திற்கேற்ற
### சிறிய தவமுயற்சிகள்

- உங்கள் உள்ளம் அமைதியற்று அலையும்போது ஒருசில நிமிடங்களுக்கு உங்கள் மனத்தை இறைவன் பால் செலுத்துங்கள்.
- இரக்கமற்றவிதமாக பேச எண்ணம் வரும் போது இனிமையான இரண்டொரு வார்த்தைகளைக் கையாளுங்கள்.
- ஊனமுற்றவர்களைக் கண்டால் ஏதேனும் பொருத்தமான ஒரு சிறு உதவி செய்யுங்கள்.
- சும்மா இருப்பதைவிட ஏதோ ஒரு பிறர் அன்புச் செயலில் அந்நேரத்தைச் செலவிடுங்கள்.

## காவலன் கண்மணிகள்

| ஒளி: 7 | எம் விழிகளின் ஒளி யேசு |
| --- | --- |
| சுடர்: 5 | எம் வாழ்வின் வழி யேசு |

ஐம்பது வினாக்கள்

31. ஆபிரகாமின் மகனைக் கடவுள் பலியாக்கும்படி கேட்ட இடம் எது?
32. பழையஏற்பாட்டில் "பாஸ்கா" என்றால் பொருள் என்ன?
33. இஸ்ரேயல் மக்கள் எகிப்தினின்று விடுதலை பெற்று புறப்பட்டபோது உண்ட விருந்தின் பெயர் என்ன?
34. இயேசு கைது செய்யப்படுமுன் கடந்து சென்ற அருவி எது?
35. தலித்தாகூம் என்பதன் பொருள் என்ன?
36. திருச்சபை திருப்பலி நிறைவேற்றாத நாள் எது?
37. நற்கருணைப் பாப்பரசர் என அழைக்கப்படுபவர் யார்?
38. இந்தியாவில் பிறந்து இலங்கையில் மறைபணிபுரிந்தவர். தமிழில் பசாம் நூல் இயற்றியவர், 1742 இல் இலங்கையில் உயிர்நீத்த குரு யார்?
39. 1993–தவக்கால கல்வித்திட்டம் உண்மைக்கும் நீதிக்கும் குரல் கொடுத்து எதனை வளமாக்க எம்மை அழைக்கிறது?
40. 16–02–1993 இல் இங்கிலாந்தில் காலமான மதர் கிளேயா, நம் மண்ணில் கற்றுக்கொடுத்த கல்விக்கூடம் எது?

கண்மணிகாள்! போட்டியின் இறுதிக்கட்டத்தை நெருங்கி விட்டோம். விடைகளை விரைந்து தேடுங்கள். இறுதிக்கட்ட வினாக்கள் அடுத்த சுடரில் வரும். உள்ளதைக்கொண்டு உள்ளத்தைத் தூய்மையாக்கி இறையில் உரம் பெற இக்காலத்தைக் கவனமாக கழியுங்கள்.

காவலன் கண்மணிகளாக வருவோரை அன்புடன் வரவேற்கிறோம்.

உங்கள் அன்பின்
அன்பு விழி

அங்கத்துவம்

294. ம. கவிதா ஆண்டு 6 திருக்குடும்பக் கன்னியர் மடம் யாழ்ப்பாணம்

295. தே. ஏஞ்சலின் ஆண்டு 6 ,, ,,

296. ச. அன்ரனிற்றா ஆண்டு 7 றோ. க. கலவன்பாடசாலை மிருசுவில்.

தவக்காலத்திற்கு ஏற்ற செபப்புத்தகங்கள், சிலுவையின் பாதையில் சிதறிய சிந்தனைகள், பெரிய சிலுவைப் பாதை, திருமணித்தியாலம், கல்லறைச் செபம், சுருக்கமான சிலுவைப்பாதை விற்பனைக்கு உண்டு.

"ஆவே மரியா"

புனித சிந்தாத்திரை மாதா கைத்தொழில் நிலையம்
92, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம் A 5/93

சென்றேக்குளி ... நூலகம்

மேய்ப்புப்பணிக்கான தேசிய மாநாடு

## இலங்கைக் கத்தோலிக்க ஆயர்களின் திருமடல் (முக்கிய பகுதிகளின் தொகுப்பு)

# "தன்னைப் புதுப்பித்து பகிரும் ஒரு திருச்சபையை நோக்கி..."

25 ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் நிகழ்ந்த தேசிய ஆயர் மன்றத்தில், இலங்கைத் திருச்சபை தனது பணி முழுமையான ஓர் அர்ப்பணம் எனத் தெரிவித்தது. — ''கிறிஸ்தவ சாட்சியத்தை விருத்திசெய்யவும், மீட்பின் நற்செய்தியை சகல மக்களுக்கும் போதிக்கவும், கிறிஸ்தவ சமூகமானது எத்தகைய அடையாளமாக இருக்கவேண்டுமென்று கிறிஸ்து விரும்பினாரோ அவ்வாறு வளர்ந்து வரும் ஒரு கிறிஸ்தவ சமூகத்தை உருவாக்கவும்'' இது எமது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் பணியேயாகும். எமது தேசிய திருச்சபையின் வரலாற்றிலே இந்த ஆயர் மன்றம் உண்மையில் ஒரு முக்கிய திருப்புமுனையாகும். ஏனெனில், இறையருளினால் அது, முக்கியமாக எமது இலங்கைத் திருச்சபையின் வாழ்வையும், பணியையும் பொறுத்தமட்டில் சிந்தனைக்கும் ஆய்வுணர்வுக்குமுரிய வேளையாக இருந்தது. உயிர்தரும் நித்திய ஆவியானவர் அதன் ஆழ்ந்தாராய்வுகளை வழிநடத்தினார். இதன் விளைவாக திருச்சபையின் அமைப்பில் ஆழ்ந்த ஆன்மீக, மறைபோதக, மேய்ப்புசார்பான சமூக சார்பான மாற்றங்கள் ஏற்பட்டன.

## அறை கூவும் சமூக மாற்றங்கள்

மேலும் கடந்த 25 ஆண்டுகளில் அனைத்துலக கிறிஸ்தவ குடும்பமும், பொதுவாக உலகம் முழுவதும் தொடர்ச்சியாக பல ஆழ்ந்த அறை கூவுகின்ற மாற்றங்களுக்கு உட்பட்டிருக்கின்றன.

உலகளாவிய இந்த மாற்றங்கள் எமது மதப்பற்றுக்கு பல சவால்களைக் கொண்டு வருகின்றன. இவை வடக்கு தெற்கு பிரிவினை, சிறிய தேசிய, இனக் குழுக்களின் தன்முனைப்பு, யுத்தங்களும் போராட்டங்களும், ஒழுக்கச் சீர்குலைவு, மட்டு மீறிய தன்னலப்பற்று, அகதிகள், புதிய நோய்களுங்கூட. வரலாற்றில் கிறிஸ்துவின் தொடர்ந்த பிரசன்னமாகிய திருச்சபை என்ற முறையில் எம்மிடம் இவற்றுக்குத் தகுந்த விடைகள் கேட்கப்படுகின்றன.

## புதுப்பித்தலுக்கு திருத்தந்தையின் அழைப்பு

திருச்சபையானது, குறிப்பாக அதன் ஆயர்களின் வழியாக எமது இந்தப் பொறுப்பைப் பற்றி எடுத்துரைத்து வந்துள்ளது.

ஆண்டவரின் மீட்புச் செய்தியை உலகின் அந்தம்வரை பரப்புவதற்கு ஒரு சமூகமாக எமது உள்ளரங்க புதுப்பித்தலை ''மீட்பரின் பணி'' என்னும் சுற்றுமடல் ஆர்வத்துடன் எடுத்துக் கூறுகிறது.

## மேய்ப்புப்பணிக்கான தேசிய மாநாடு

கிறிஸ்துவில் எமது விசுவாசத்திற்கமைய சிறந்த வாழ்வை மேற்கொள்வதற்கும், அவரில் மானிட, இயவுலக உண்மை அதிகாரம் பெறும் பொருட்டும் புதுப்பித்தல் முக்கியமானது என்பதை உய்த்துணர்ந்து, இலங்கைக் கத்தோலிக்க ஆயர்களாகிய நாம் இன்றைய இலங்கையின் சமுதாயத்தில் எமது திருச்சபையின் வாழ்வும் பணியும் பற்றி ஒரு தேசிய ஆய்வரங்கு நடத்தும்படி பரிசுத்த ஆவியால் தூண்டப்பட்டுள்ளதாக உணர்கிறோம்.

**மேய்ப்புப்பணிக்கான தேசிய மாநாடு** என இனி அழைக்கப்படும் இத்தேசிய ஆய்வரங்கு 1994 ஆகஸ்ட் மாதம் இலங்கா நாயகி தேசிய குருமடத்தில் நடைபெறும். அது தலத் திருச்சபையின் பல்வேறு பகுதிகளின் பிரதிநிதிகள் அனைவரையும், ஒன்றுகூட்டி திருச்சபையின் வாழ்வுக்கும் பணிக்கும் முக்கியமான விடயங்கள் பற்றி விரிவான ஆய்வு நடத்தும். ஒரு தேசிய திருச்சபையென்ற மட்டில் நாம் இதுவரை எய்தப்பெற்றவற்றை மதிப்பீடு செய்வதற்கும், இன்றைய சவால்களையும் நற்செய்திப்பணிக்கான வாய்ப்புகளையும் கணிப்பீடு செய்வதற்கும், எமது திருச்சபையின் இன்றைய நிலையை மதிப்பிடுவதற்கும். பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலின்கீழ், இனி வரப்போகும் ஆண்டுகளில் அதன் வாழ்விலும் பணியிலும் ஏற்படுத்தக் கூடிய புதுப்பித்தலுக்கான வழிவகைகளையும் திட்டங்களையும் உய்த்துணரவும் வேண்டிய காலம் வந்துவிட்டது எனக்கருதுகிறோம்.

இந்த நோக்கத்திலே **''தன்னைப் புதுப்பித்து பகிரும்** ஒரு **திருச்சபையை நோக்கி''** என்னும் கருத்தை மேற்படி ஆய்வரங்கின் ஆய்வுப் பொருளாக தேர்ந்தெடுத்துள்ளோம்.

இறைவார்த்தையின் அடிப்படையிலும், திருச்சபையின் பாரம்பரியம், எமது இன்றைய சமுதாயத்தின் பண்புக்கூறுகள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டும் இலங்கைத் திருச்சபையின் உறுப்பினர்கள் ஆகிய எம்மைப் பொறுத்த மட்டில் இறைவனின் சித்தம் யாதென உய்த்துணரும் வழிவகைகளை இவ்வாய்வரங்கு மேற்கொள்ளும்.

## இறைமக்களின் பங்களிப்பு

மறைபோதகப்பணிக்கான கத்தோலிக்க தேசிய ஆணைக்குழுத் தலைவரான ஆயர் தலைமையில் இயங்கும் ஓர் ஆயத்தக் குழுவின் மூலம் இம் மாநாட்டிற்கான ஆயத்தவேலைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வினாக்கொத்துகள், பத்திர ஆதாரங்கள், பல்வேறு விடயங்களைப்பற்றி விரிவான கட்டுரைகள் ஆகியன பரப்பப்படும். கத்தோலிக்க ஆயர் பேரவையின் தேசிய நடுநிலையத்தில் உள்ள செயலகத்தால் ஆயத்தவேலைகள் யாவும் மேற்பார்வை செய்யப்படும்.

மாநாட்டின் ஆயத்தக் கட்டத்திலும், ஆய்வுகட்டத்திலும், நிறைவேற்று கட்டத்திலும் அதிக வேலை செய்ய வேண்டியிருப்பதாலும், வருங்காலத்தில் இம் மாநாடானது எமது திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் நிச்சயம் தாக்கமுடையதாய் இருக்குமாதலாலும் பின்வருவன மிகவும் அவசியமாகின்றன.

அ) எல்லாவற்றுக்கும் மேலாக இம் மாநாடு பலன்தர வேண்டுமென எமது பரலோக தந்தையிடம் மன்றாடுங்கள்.

ஆ) கீழ்க்காணும் வழிகளில் அதன் ஆயத்த வேலைகளில் பங்கெடுங்கள்.

1. செபத்துடனும் மனச்சாட்சியின்படியும் வினாக்கொத்துக்கு விடையளித்தல்.
2. புதுப்பித்தல் பற்றிய உங்கள் தனிப்பட்ட கருத்துக்களை மாநாட்டின் செயலகத்துக்கு அனுப்புதல். விலாசம் 19 பல்கோம் பிளேஸ் கொழும்பு 8
3. திருச்சபையின் புதுப்பித்தல் பற்றி குழு, பங்கு, வட்டார அல்லது மறை மாவட்ட மட்டங்களில் ஆய்வுகளையும், படிப்புத் தினங்களையும் நடத்தி அவற்றின் அறிக்கைகளை அல்லது கருத்துக்களை செயலகத்துக்கு அனுப்பவும்.

(இ) மாநாட்டை ஒழுங்கு செய்வதில் தேவைப்படும் சகல உதவியையும் தாருங்கள். முக்கியமாக தகுந்த செயல் நோக்கமுடையவர்களைப் பேரவைக்குப் பிரதிநிதிகளாக அனுப்புங்கள்.

## இறை ஆசீர் வேண்டுவோம்

நாம் பிரமாணிக்கத்துடன் நிறைவேற்ற விழைவது அவரது சொந்தப் பணியேயாதலால் எமது முயற்சிகளைத் தயை கூர்ந்து ஆசீர்வதித்தருள வேண்டுமென இறைவனை வேண்டுகிறோம். ஏனெனில் ''ஆண்டவரே வீட்டைக் கட்டினாலொழிய அதைக் கட்டுபவர்களின் உழைப்பெல்லாம் வீணே. ஆண்டவரே நகரைக் காத்தாலொழிய அதைக் காப்பவன் விழிப்பெல்லாம் வீணே'' (சங். 127 : 1)

கல்வாரியில் சிலுவையடியிலும் (அரு 19 : 23–27) முதல் பெந்தெகோஸ்து நாளில் அப்போஸ்தலருடனும் இருந்தது போல் (அப். பணி 1 : 14) எம்மோடும் இருந்து எமது ஆய்வுகளின் போது எம்மை உறுதிப்படுத்தும்படி எமது பரிசுத்த பரலோக அன்னையாம் மரியாளையும் வேண்டுகிறோம்.

(ஒப்பம்) (இலங்கை கத். ஆயர் பேரவையின் 13 உறுப்பினர்)

புனித. சின்னப்பர் விழா ஜனவரி 25, 1993

## இளைப்பாறும் ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலத்திற்கேற்ற தொண்டு செய்த இறைவனின் பிரதிநிதி என்று நல்லூர் ஆதின குருக்கள் அவர்களும்; தமிழ் மக்களின் விடிவின் விடிவெள்ளி என்று யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களும்; இறைப்பற்றும் அறிவாற்றலுமுள்ள திருச்சபையின் இளவரச உலகப் பிரசை என்று முன்னாள் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் ராஜன் கதிர்காமர் அவர்களும்; பிறருக்காக வாழ்ந்த ஆத்மீக வீரன் என்று வண. S. P. ஜெயசிங்கம் அடிகளாரும்; அன்பினால் உருகி சேவைசெய்த பண்பாளன் என்று A. K. சுப்பிரமணியம் அவர்களும் இளைப்பாறும் ஆயர் அவர்கட்கு புகழாரம் சூட்டினார்கள். உடுவில் மகளிர் கல்லூரி அதிபரினால் ஓர் ''அன்பு மடல்'' வாசித்தளிக்கப்பட்டது.

ஆயர் அம்பலவாணர் அவர்கள் தமது பதிலுரையில், தாம் ஆற்றிய பணி சிறிய பணியாயிருந்தாலும், அற்பமான நாம் சமுதாயத்தில் ஒரு இயைபியக்கம் ஊக்குவோன் (Catalyst) ஆக இருந்து பெரிய மாற்றங்களை உண்டாக்குவதற்கு உதவ வேண்டுமென்று கூறி, தம் ஆசீரை அனைவருக்கும் அளித்து விடைபெற்றார்.

## வேதாகமம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தந்தையுடன், அல்லது யாழ் மறைக்கல்வி நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு யாழ் மறைக்கல்வி இயக்குநர் அருட்திரு R. H. சகாயநாயகம் அடிகளார் தெரிவித்திருக்கிறார்.

தேசிய ரீதியில் வெற்றியீட்டுபவர்களுக்குத் தங்கப் பதக்கம், ரொக்கப் பணம், சான்றிதழ் வழங்கப்படும்.

### பாஸ்கா சிறப்பிதழ்

பாஸ்கா சிறப்பிதழுக்கான உங்கள் ஆக்கங்களை (150 சொற்களுக்கு மேற்படாமல் — ஒரு பக்கத்தில் மாத்திரம்) 27-03-93ற்கு பிந்தாமல் அனுப்பி வைக்கவும். (ஆ–ர்)


### கத்தோலிக்க ஆசிரியர்கள்

ஒரு நாள் ஞான ஒடுக்கம்

இடம்:– யாழ். மறைக் கல்வி நடுநிலையம்

காலம்:– 27-03-93 சனிக்கிழமை காலை 9.00 மணி.

பங்குபற்ற விரும்புகிறவர்கள் செயலாளருக்கு தயவு கூர்ந்து 20–03–93க்கு முன்னர் தெரியப்படுத்தவும்.

மறைக்கல்வி நடுநிலையம். ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

செயலாளர் யாழ். கத். ஆசிரியர் சங்கம்


இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல. QB/1001/58/81